**இந்திய வானிலைத் துறை & தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை– 641 003.**

**மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை – 28.05.2025**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 28°செ முதல் 39°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 29°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேரவெப்பநிலை 16°செ முதல் 23°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 11°செ முதல் 14°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் பரவலாக மழை 736.5 மி.மீ. பெறப்பட்டது.

**1. மேற்குமண்டலம்**

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த 5 நாட்களுக்கு மிக கனமழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 23°செ முதல் 27°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 19°செ முதல் 23°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 90 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 70-80 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 20-22 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. பெரும்பாலும் காற்று தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- மேற்கு மண்டலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் அடுத்து வரும் ஐந்து நாட்களுக்கு மிதமானது முதல் கன மழையுடன் மணிக்கு 12-28 கி.மீ வரை காற்றும் எதிர்பார்க்கப்படுகிறது.
- கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டஙகளில் காற்றின் வேகம் மிக அதிகமாக 28 கி.மீ மேல் எதிர்பார்க்கப்படுகிறது.
- மேற்குமலையடிவாரங்களில் கனமழை எதிர்பார்க்கப்படுகிறது. இடியுடன் கூடிய மழையும் சுழற்காற்றும் எதிர்பார்க்கப்படுகிறது.
- வெப்பநிலையானது 2-3°செ வரையிலும் வாரத்தின் பிற்பகுதியில் குறைய வாயப்புள்ளது. அதிகப்படியான மழைநீரினை போதிய வடிகால் வசதி மேற்கொண்டு பண்ணைக்குட்டைகளில் சேமிப்பதனால் தேவையான சமயங்களில் பயன்படுத்தலாம்.
- வலுவான மேற்பரப்பு காற்று எதிர்பார்க்கப்படுவதால் வாழை, பப்பாளி, முருங்கை மற்றும் கரும்பு பயிர்களுக்கு முட்டு கொடுக்கவும்.
- மழை எதிர்பார்க்கப்படுவதால் குறுகிய கால நெல் நாற்றாங்காலில் மாலையில் 5 செ.மீ அளவில் நீரினை கட்டி காலையில் வடிப்பதனால் மழைத்துளியின் வேகத்தினால் விதைமுளைப்பில் ஏற்படும் பாதிப்பினைத் தவிர்க்கலாம்.
- அதிகமழை எதிர்பார்ப்பதால், நெல் நாற்றாங்காலில் தண்ணீர் தேங்காமல் பார்த்து கொள்ளவும். நாற்று அழுகல் நோய் தவிர்க்க வடிகால் வசதி செய்யவும். நாற்றாங்காலில் குலை நோய் வரவாய்ப்புள்ளது. எனவே அசாக்ஸிஸ்ட்ரோபின் 23%SC @ 1 மில்லி / லிட்டர் என்ற அளவில் மழை அல்லாத நாட்களில் தெளிக்கவும்.
- மழைக்கு பின், ஓரளவு பாதிக்கப்பட்ட தூர் பிடிக்கும் பருவத்தில் இருக்கும் நெல் வயல்களில் இருந்து மழை நீரை வெளியேற்றி 1/3 பங்கு தழைசத்தும் + 50% சாம்பல் சத்தும் மேலுரமாக இடவும்.

- மழை எதிர்பார்க்கப்படுதால், உழவிட்ட நிலங்களில் இறவை சோளம் விதைப்பினை தொடரலாம். சோளம் விதைப்பிற்க்கு முன்னர் மெட்டாலாக்ஸைல் 35% WS @ 10 கிராம் / கிலோ விதை என்ற அளவில் விதை நேர்த்தி செய்யவும்.
- விதையை தயோமீத்தாக்ஸைம் 30% FS @ 10 கிராம் / கிலோ விதை என்ற அளவில் விதை நேர்த்தி செய்து குருத்து ஈ தாக்குதலை கட்டுபடுத்தவும்.
- கம்பு பயிர் செய்வதற்கு இது உகந்த பருவம் ஆதலால் விவசாயிகள் கம்பு பயிரை இறவை பயிராக விதைப்பினை தொடரலாம்.
- கம்பு விதைப்பிற்க்கு முன்னர் மெட்டாலாக்ஸைல் 35% WS @ 10 கிராம் / கிலோ விதை என்ற அளவில் விதை நேர்த்தி செய்யவும்.
- கோடை மழை எதிர்பார்க்கப்படுவதால் சாகுபடி செய்யப்பட்ட மக்காச்சோளம் மற்றும் ஏனைய இறவை பயிர்களுக்கு அதிகப்படியான மழை நீர் வடிய போதிய வடிகால் வசதி செய்யவும்.
- மக்காசோளம் விதைப்பிற்க்கு முன்னர் மெட்டாலாக்ஸைல் 35% WS @ 10 கிராம் / கிலோ விதை என்ற அளவில் விதை நேர்த்தி செய்யவும். தொடர்ந்து மழை பெய்து வருவதால், மக்காசோள கதிரில் அஸ்பெர்ஜில்லஸ் நோய் தொற்று வரவாய்ப்புள்ளது. எனவே கதிர் அறுவடைக்கு பிறகு நன்கு உலர்த்தி தானியத்தை பிரித்தெடுத்து பிறகு தானியத்தை நன்கு சூரிய வெப்பத்தில் உலர்த்தி தானியத்தில் ஈரப்பதம் 13% குறைவாக பார்த்துக் கொள்ளவும்.
- பொள்ளாச்சி வட்டத்தில் மானாவாரி ஆனிப்பட்ட நிலக்கடலை நடவு செய்ய இதுவே உகந்த தருணமாகும். மேலும் மழை எதிர்பார்க்கப்படுவதால் விதைப்பதற்கு நிலம் தயார் செய்து விதைப்பு செய்யவும்.
- நிலக்கடலை விதைப்பிற்க்கு முன் விதை நேர்த்தி மிகவும் அவசியம். எனவே கார்பாக்ஸின் 37.5% + திரம் 37.5 % WS @ 3 கிராம் / கிலோ விதை என்ற அளவில் விதை நேர்த்தி செய்து விதைக்கவும்.
- இடியுடன் கூடிய மழையும் சுழற்காற்றும் எதிர்பார்க்கப்படுவதால் ஐந்து மாதங்களுக்கு மேலுள்ள கரும்பிற்கு தோகை உரித்து விட்டம் கொடுக்கவும்.
- மழை எதிர்பார்க்கப்படுவதால் கிடைக்கும் மண்ணின் ஈரப்பதத்தை கொண்டு பின் பருவ கரும்பு நடவை தொடர்ந்து மேற்கொள்ளவும்.
- பகல் மற்றும் இரவு நேர வெப்பநிலை உயர்ந்து காணப்படுவதால் இடியுடன் கூடிய மழையும் சுழற்காற்றும் எதிர்பார்க்கப்படுகிறது.. எனவே ஐந்து மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.
- தொடர்ந்து மழை இருப்பதால் வாழையில் சிகாடோக்கா மற்றும் வாழைகால் நுனி அழுகல் நோய் வரவாய்ப்புள்ளாது. எனவே மேன்கோஸெப் 75% WP @ 1.5 to 2 கிலோ / ஹெக்டர் மருந்தை 750 லிட்டர் தண்ணீரில் கலந்து மழை அல்லாத நாட்களில் தெளிக்கவும்.
- அனைத்து மரப்பயிர்களுக்கும் தூரிலிருந்து 1.5 மீட்டர் தூரத்தில் உள்நோக்கிய வட்டப்பாத்தி அமைத்து கோடை மழையினை வேர்பகுதியில் சேமிக்கவும்.
- தென்னையில் அடித்தண்டு அழுகல் நோய் தவிர்க்க 25 கிலோ எருவுடன் 200 கிராம் பேசில்லஸ் சப்டில்லிஸ் கலந்து வேர் பகுதியில் இடவும்.
- இளம் குஞ்சுகளுக்கு போதுமான அளவு செயற்கை வெப்பம் (2 வாட்ஸ் / குஞ்சு) அளிக்க வேண்டும். கோழி கூடாரங்களுக்குள் சாரல் மழையினால் ஈரம் உண்டாகாமல் இருக்க சுற்றிலும் தார்பாய்களை தொங்கவிடவும்.
- இடியுடன் கூடிய மழை எதிர்பார்க்கப்படுவதால் 11.00 – 4.00 மணிவரையிலும் மற்றும் மேற்குத்தொடர்ச்சி அடிவாரங்களிலும் கால்நடைகளை மேய்சலுக்கு அனுப்பவேண்டாம்.
- கால்நடை கொட்டகைகளில் கொசு தொல்லையை தடுக்க வாரத்திற்கு ஒரு முறை நொச்சி இலைகளை கொண்டு புகை போடவும்.

**2. காவிரி டெல்டா மண்டலம்**

காவிரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர், அரியலூர், திருச்சி மற்றும் மயிலாடுதுறை ஆகிய இடங்களில் வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். அடுத்த ஐந்து தினங்களுக்கு இலேசான தூரல் மழை எதிர்பார்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 26 - 37 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 26 - 28°செ ஆகவும், காலைநேரகாற்றின் ஈரப்பதம் 70-80 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 40-60 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 16 – 26 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- நெல் நடவு செய்யும் பொழுது பதினெட்டு முதல் இருபத்தி இரண்டு நாட்கள் வயதுடைய நன்கு வாளிப்பான நாற்றுக்களை உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம் (1 கிலோ/ 125 மிலி) மற்றும் பாஸ்போபாக்டீரியாவை (1 கிலோ/ 125 மிலி) 40 லிட்டர் தண்ணீரில் இட்டு நாற்றுகளின் வேர் பாகம் கரைசலில் நன்கு நனையுமாறு 15 முதல் 30 நிமிடங்கள் வரை வைத்திருந்து பிறகு நடவு செய்ய வேண்டும்.
- பருத்தியில் தற்போது நிலவக்கூடிய வானிலையின் காரணமாக பூ மற்றும் பிஞ்சு உதிர்வதை தடுக்க நாப்தலின் அசிடிக் அமிலம் 40 பிபிம் கரைசலை விதைத்த 60 மற்றும் 90 வது நாளில் தெளிப்பதால் மொட்டுகள் உதிர்வது குறைக்கப்பட்டு காய்கள் அதிகம் பிடிக்க உதவுகிறது.
- தென்னையில் குரும்பை கொட்டுதலுக்கு உகந்த வானிலை இருப்பதால் தவிர்ப்பதற்க்கு 200 மி.லி தென்னை டானிக்கை வேர் மூலம் கொடுக்கவும்.
- விவசாயிகள் கறவை மாடுகளுக்கு போதிய அளவு தாது உப்பு கலவையை அளிக்கலாம்.

**3. தெற்குமண்டலம் -1**

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான தூத்துக்குடி, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டங்களில் அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 29-36°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23-26°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 90 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 40-80 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. 24 மணி நேர காற்றின் வேகம் மணிக்கு 12-24 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என்றும் காற்று பெரும்பாலும் மேற்கு-தென்மேற்கு திசையில் இருந்து வீசும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- மானாவாரி மற்றும் பாசனப்பயிர்களில் மருந்து தெளிப்பதை ஒத்திவைக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.
- நெல் நாற்றங்காலில் மருந்து தெளிப்பதை ஒத்திவைக்கவும். அதிகபடியான நீர் தேங்கி பயிர் மூழ்கிவிடாமல் இருக்க தேவையான அளவு நீர் மட்டும் பாய்ச்சவும். நெல் வளர்ச்சி பருவத்தில் மருந்து தெளிப்பதை ஒத்திவைக்கவும். அதிகபடியான நீர் தேங்கி பயிர்களில் ஆக்சிஜன் குறைய வாய்ப்பு தேவையான அளவு நீர் மட்டும் பாய்ச்சவும்.
- நெல் தரிசு பயறுகளை இயந்திரங்கள் கொண்டு விரைவாக அறுவடை செய்யவும்.
- பருத்தி (பாசனப்பயிர்கள்) வளர்ச்சி மற்றும் பூ பருவத்தில் அதிக காற்று மற்றும் மழையில் இருந்து செடிகளை பாதுகாக்க மண் அனைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

- காய்கறிகளில் மேகமூட்டமான வானிலை நோய்கள் மற்றும் பூச்சிகளின் தாக்குதலுக்கு உகந்ததாக உள்ளது. விவசாயிகள்தங்கள் வயல்களை தொடர்ந்து கண்காணித்து அதற்கேற்ப முன்னேற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
- கடலையில் வளர்ச்சி மற்றும் பூ பருவத்தில் வடிகால் வசதி செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**தெற்கு மண்டலம் -2**

வரும் நாட்களில் மதுரை, சிவகங்கை, தேனி, புதுக்கோட்டை, திண்டுக்கல், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மாவட்டத்தின் அடுத்த ஐந்து நாட்களுக்கு லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்சவெப்பநிலை 31-33°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24-25°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 60-80 சதவிகிதமாகவும் மற்றும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 50-60 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு 10-18 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

**நெல்**

குறுவை பருவத்தில் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் நெல் பயிரில் நுண்ணுயிர் உரங்கள் இடுதல் நல்ல பயனை அளிக்கும். நெல் நடவு நட்ட மூன்றிலிருந்து ஐந்து நாட்களுக்குள் ஒரு ஹெக்டேருக்கு 250 கிலோ என்ற அளவில் அசோலாவை பரவலாக தூவி நெற்பயிருடன் வளரவிட வேண்டும். அசோலா வளர்ச்சியடைந்த நிலையில், களை எடுக்கும் தருணத்தில் காலால் மண்ணிற்குள் மிதித்து விடுதல் வேண்டும்.

**பருத்தி**

பருத்தியில் தத்துப்பூச்சிகளின் தாக்குதலால் இலைகளிலுள்ள சாறுகள் உறிஞ்சப்பட்டு இலைகளானது சுருண்டுவிடுகின்றன. மேலும் இலைகளின் ஓரங்கள் காய்ந்து தீய்ந்தது போல காணப்படும். பூச்சியின் தாக்குதல் அதிகமாகும் பொழுது இலைகள் காய்ந்து பின்னர் உதிர்த்து விடும். செடிகளின் வளர்ச்சி பாதிக்கப்பட்டு மேலும் பூ மற்றும் காய் பிடிப்பது குறைகின்றது. இதனை கட்டுப்படுத்த ஏக்கருக்கு பின்வரும் மருந்துகளில் ஏதேனும் ஒன்றை தெளிக்கலாம். பிப்ரோனி ல் 5% SC @ 600 ml/ac அல்லது இமிடாகுளோபிரிட் 17.8% SL @ 40 ml/ac அல்லது தயமீதாக்சம் 25% WG @ 40 g/ac.

**தென்னை**

தற்போது நிலவும் பருவச்சூழ்நிலையில் தென்னங்கன்றுகளுக்கு நீர் ஆவியாதலுக்கேற்ப சொட்டு நீர்ப்பாசன முறையின் படி நீர் பாய்ச்சுதல் முக்கிமானதாகும். பொதுவாக ஜுன் மற்றும் ஜுலை, அக்டோபர் முதல் டிசம்பர் வரை தென்னை மரங்களுக்கு நீர்நிறைந்த பகுதிக்கு ஒரு நாளைக்கு 60 லிட்டர் வீதமும், நீர் ஓரளவு கிடைக்கும் பகுதிகளுக்கு ஒரு நாளைக்கு 40 லிட்டர் வீதமும், வறட்சியான பகுதிகளுக்கு ஒரு நாளைக்கு 20 லிட்டர் வீதமும், நீர்பாசனம் கிடைக்கும்படி செய்ய வேண்டும்.

**வாழை**

வாழை நடவு செய்துள்ள விவசாயிகள் வாழை ரிச் என்ற வளர்ச்சி ஊக்கியை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 5 கிராம் என்ற அளவில் எடுத்து அதனுடன் சிறிய சாம்பு பாக்கெட் மற்றும் எலுமிச்சைச் சாறு கலந்து நடவு செய்த மூன்று மாதத்திற்கு பின் தொடங்கி குழை ஈனும் காலம் வரை ஒரு மாத கால இடைவெளியில் தொடர்ந்து தெளிக்க வேண்டும்.

**கத்தரி**

கத்தரி பயிரில் பழஅழுகல் நோய் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. நோய்தாக்குதலின் காரணமாக பழங்களில் நுனிப்பகுதியில் நீர் கோர்த்து பழுப்பு நிறத்திலும், பூஞ்சை வளர்ச்சியுடன் நீர்கசிவும் காணப்படும். தீவிர நோய் தாக்குதலின் போது காய்களின் காம்புகளைத் தவிர காய்கள் விழுந்து விடும். இதனைக் கட்டுப்படுத்த 10லிட்டர் தண்ணீருக்கு 35மில்லி கசுகாமைசின் மற்றும் 10மில்லி ஒட்டுப்பசை கலந்து தெளிக்க வேண்டும்.

***தக்காளி***

*தற்போது தக்காளி பயிரைத் தாக்கும் நாற்றழுகல் நோய் பரவலாக தென்படுகின்றது. நாற்றழுகல் நோய் தக்காளியில் முளைக்கும் முன் மற்றும் முளைத்தபின் ஏற்படுகிறது. இதனை கட்டுப்படுத்த உயர்த்தப்பட்ட நாற்றங்கால் மேடைகளை உருவாக்க வேண்டும். தொடர்ச்சியான நீர்ப்பாசனம் மற்றும் சரியான வடிகால் வசதி அமைக்க வேண்டும். நாற்றுக்களை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் என்ற அளவில் தயாரித்த காப்பர் ஆக்ஸிகுளோரைடு கலவையில் நனைக்க வேண்டும். ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் டிரைக்கோடெர்மா விரிடி கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும். மேகமூட்டமான வானிலை இருக்கும்பொழுது ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2கிராம் என்ற அளவில் மெட்டாலக்ஸில் மருந்தினை தெளிக்கவும்.*

***நிலக்கடலை***

*நிலக்கடலை பயிரில் காய்புழுவின் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இவ்வகை புழுக்கள் இலை, மொட்டு மற்றும் மலர்களை உண்டு சேதப்படுத்தும் ஒரு எக்டேர்க்கு ஐந்து இனக் கவர்ச்சிப்பொறி வீதம் அமைத்து ஆண் அந்துப் பூச்சியைக் கவர்ந்து அழிக்கலாம். அல்லது ஒரு எக்டேர்க்கு 1 லட்சம் முட்டை ஒட்டுண்ணியான ட்ரைக்கோகிரம்மா கைலானிஸ் வீதம் நடவு செய்த 40 நாட்களுக்கு பிறகு வெளியிட்டு காய்த்துளைப்பானை கட்டுப்படுத்தலாம். அல்லது ஒரு ஏக்கருக்கு 160 மிலி (ஒரு லிட்டர் தண்ணீருக்கு 0.5மில்லி) இன்டோக்சாகேப் 14½சதம் அல்லது ஏக்கருக்கு 60 மில்லி (ஒரு லிட்டர் தண்ணீருக்கு 0.5மில்லி) ஸ்பினோசாடு 45சதம் இவற்றில் ஏதேனும் ஒரு மருந்தினை பூ மொட்டு விட துவங்கியதிலிருந்து 15 நாட்கள் இடைவெளியில் தெளித்து கட்டுப்படுத்தலாம்.*

***எள்***

*எள் பயிரில் (பச்சைப்பூ) பூவிலைநோய் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. நோய் தாக்குதலினால் செடியின் அனைத்து பூக்கும் பகுதிகளும் பச்சை இலைகளாக மாறும், பூக்கும் பாகங்களின் நரம்புகளில் உள்ள பச்சை நிறமானது வெளிர்ந்து காணப்படும். தீவரமாக பாதித்த பகுதிகளில் பூக்கள் முழுவதும் சிறு சிறு இலைகளாக அடர்ந்த நிலையில், சிறிய இடைக்கணுக்களைக் கொண்டு, கிளைகள் வளைந்து காணப்படும். காய்கள் வளர்ந்தாலும் அதில் விதைகள் காணப்படாது. இப்பூவிலை வைரஸ் நோயானது ஓரோசியஸ் அல்பிசின்டஸ் எனும் தத்துப்பூச்சியினால் பரவுகிறது. இதனைக் கட்டுப்படுத்த 10லிட்டர் தண்ணீருக்கு 35கிராம் என்ற அளவில் காப்பர் ஆக்சிக்குளோரைடு உடன் 10மில்லி ஒட்டுப்பசை கலந்து தெளிக்கவும்.*

*உரம் வைத்தல் மற்றும் மருந்து தெள்ளிக்கும் வேலைகளை மழை இல்லாத நாட்களில் காலை அல்லது மாலை நேரங்களில் மேற்கொள்ளவும்.*

***கால்நடை***

*நிகழும் தட்பவெப்ப சூழ்நிலையின் காரணமாக ஆடுகளை ஆட்டு கொல்லி நோய் தாக்க வாய்ப்பு உள்ளது. இதனை தவிர்க்க எதிர் வரும் ஜூன் மாதத்தில் விவசாயிகள் தங்களுக்கு அருகில் உள்ள கால்நடை மருத்துவரை அணுகி தங்களது ஆடுகளுக்கு ஆட்டுக் கொல்லி எனப்படும் பிபிஆர் நோய்க்கான தடுப்பூசி மருந்தினை போட்டுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.*

## ***4. மலைப்பிரதேசமண்டலம்***

*மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம் மேகமூட்டத்துடன் இருக்கும். அடுத்த ஐந்து நாட்களுக்கு மிக அதிக கனமழை முதல் இலேசான மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 12-16°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 09-13°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 90-100 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 90 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 14-16 கி.மீ அளவுக்கு தென்மேற்கு திசையில் வீசக்கூடும்.*

**வேளாண் அறிவுரை**

- அனைத்து பயிர்கள் i) போதிய வடிகால் வசதி வழங்குதல். ii) உரம் மற்றும் பூச்சிக் கொல்லி பயன்பாடு போன்ற உழவியல், பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மழை நிற்கும் வரை ஒத்திவைக்கவும்.
- விதை மூலம் பரவும் நோய்களை நிர்வகித்தல் விதைகளை டிரைக்கோடெர்மா அஸ்பெரெல்லம் @ 4 கிராம்/கிலோ அல்லது பேசில்லஸ்சப்டிலிஸ் @ 10 கிராம்/கிலோ கொண்டு விதை மூலம் பரவும் நோய்க் கிருமிகளை கட்டுப்படுத்த விதை நேர்த்தி செய்யலாம். மேலும், எந்தவொரு பயிர்திட்டத்திற்கும் முன்பு மண் பரிசோதனை செய்யப்பட வேண்டும்.
- பூண்டு-ஊட்டச்சத்து மற்றும் நோய் மேலாண்மை : பூண்டு விளைச்சலை அதிகரிக்க நடவு செய்த 30, 45 மற்றும் 60 நாட்களில் நீரில் கரையக் கூடிய நுண்ணூட்டச் சத்து கலவையை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 0.50 கிராம் என்ற அளவில் இடலாம். மழை இல்லாத நேரங்களில் தெளிக்க வேண்டும்.
- வாழை i) 5 மாத வயதுள்ள மரங்களுக்கு மரக் கம்பங்களைப் பயன்படுத்தி ஆதரவு அளிக்கவும். ii) வடிகால் வசதி செய்து, உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன்படுத்துவதை தவிர்க்கவும். iii) அழுகும் மற்றும் அழுகிய இலைகளை அகற்றுதல் மற்றும் அழித்தல்
- கால்நடைகள் இடியுடன் கூடிய மிக அதிக கன மழை முதல் லேசான மற்றும் மழை கால நோய்களால் பாதிக்கப்படலாம்.
- கால்நடைகள் i) மின்னல் மற்றும் இடியுடன் கூடிய மழையிலிருந்து உங்கள் விலங்குகளைப் பாதுகாக்கவும். ii) விலங்குகளை வெளியில் மேய்க்க அனுமதிக்காதீர்கள். iii) மின் கம்பங்கள் மற்றும் மரங்களுக்கு அடியில் கால் நடைகளை கட்ட வேண்டாம். iv) உள்ளூர் கால் நடை மருத்துவருடன் கலந்தாலோசித்து, உங்கள் கால்நடைகளுக்கு பருவ கால நோய்களுக்கு எதிராக தடுப்பூசி போடுங்கள்.

**5. வட மேற்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்பட்டு மாவட்டத்தின் பல இடங்களில் இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 31 - 32°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24- 25°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 40 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 08-12 கி.மீ அளவுக்கு தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- பொதுவாக பயிர்களில் மழையை பயன்படுத்தி மண்வளத்தை மேம்படுத்த ஏக்கருக்கு 20 கிலோ பசுந்தாள் உரப்பயிர்களான **சணப்பை** அல்லது **தக்கைப்பூண்டு** அல்லது **நவதானியத்தை** விதைத்து அவ்வயலில் 30-45 நாட்களுக்குள் மறுக்கி விட வேண்டும்.
- நடப்பு பட்டத்தில் நிலக்கடலை இரகங்களான **கோ 6, கதிரி 1812 மற்றும் செட்டிநாடு 1** இரகத்தை தேர்வு செய்து விதைக்கலாம். மேலும்இ விதைக்கும் முன் ட்ரைகோடெர்மா விரிடி என்ற பூஞ்சாண கொல்லியுடன் (4 கிராம் , ஒரு கிலோ விதை) விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும்.
- தற்போது பெய்துள்ள மழை நீரை பயன்படுத்தி, தென்னை மரத்திற்கு உரமிடும் விவசாயிகள் மரம் ஒன்றிற்கு 1 கிலோ **தென்னை நுண்ணூட்டக் கலவையை** தொழு உரத்துடன் கலந்து இடுவது குரும்பை உதிர்வது தடுக்கப்பட்டு அதிக மகசூல் பெற முடியும்.

**கால்நடை ஆலோசனைகள்**

**ஆடு, மாடு மற்றும் கன்றுகளில் குடற்புழு தாக்கமும் தடுக்கும் முறைகளும்**

- தமிழகத்தில் கோடை மழை பரவலாக பெய்து வருவதால் உருளைப்புழுக்களின் நோயுண்டாக்கும் பருவம் மற்றும் நாடாப்புழுக்களைப் பரப்பும் புல் சிற்றுண்ணிகளும் மேய்ச்சல் காடுகளில் அதிகமாக காணப்படும். இதனால் மேய்ச்சலுக்குச் செல்லும் இளம் குட்டிகள் மற்றும் கன்றுகளுக்கும் குடற்புழு தாக்கம் ஏற்படலாம். குடற்புழு தாக்கம் கண்ட குட்டி மற்றும் கன்றுகளில் தீவனம் தின்னாமை, வளர்ச்சி குறைவு, மற்றும் கழிச்சல் போன்ற பொதுவான அறிகுறிகளும், இரத்தத்தை உறிஞ்சும் உருளைப்புழுக்களின் தாக்கத்தில் இரத்தசோகை, கீழ்தாடை வீக்கம் மற்றும் மூக்கு சளி போன்ற அறிகுறிகள் காணப்படும். குடற்புழு தாக்கம் தீவரமாக இருந்தால் இறப்பு ஏற்படலாம். அதனால் குடற்புழு தாக்கத்தினால் ஏற்படும் பொருளாதார இழப்பை தடுக்க கால்நடைகளுக்கு சாணப்பரிசோதனை செய்து, பாதிக்கப்பட்டவைகளுக்கு குடற்புழு நீக்கம் செய்ய வேண்டும். மேலும் கால்நடைகளை அதிகாலை நேரங்களில் மேய்ச்சலுக்கு எடுத்துச் செல்லக் கூடாது.
- காற்றின் வேகம் தொடர்ந்து அதிகமாக காணப்படுவதால் தீவனம் வீணடிக்கப்படாமல் பாதுகாத்துக்கொள்ளும் வியூகங்களில் பண்ணையாளர்கள் ஈடுபட வேண்டும். இன்னும் இரு மாதங்களுக்கு அதிக காற்றின் வேகம் கொண்ட வானிலை நிலவும். தீவன விரயத்தை தடுக்க தீவனத்தில் சிறிது அளவு தாவர எண்ணையை சேர்க்கலாம். இதனால் மதிப்புள்ள வைட்டமின் போன்றவை காற்றில் பறந்து செல்வதை தடுக்க முடியும். மேலும், உயர்மனைகளில் பக்கவாட்டில் படுதாவை கட்ட வேண்டும்.

**6. வடகிழக்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், ராணிபேட்டை, திருப்பத்தூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில் வானம் தெளிவாக காணப்படும். பகல்நேர வெப்பநிலை 34°செ முதல் 36°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 25°செ முதல் 30°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலை நேர காற்றின் ஈரப்பதம் 60-80 சதவிகிதமாகவும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 40-60 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரி காற்றின் வேகம் 16-24 கி.மீ ஆகவும் பெரும்பாலும் காற்று மேற்கு - தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரைகள்**

- தற்பொழுது நிலவிவரும் சூழ்நிலையில் நெல் நாற்றங்காலில் இலைப்பேன் தாக்கம் தென்பட்டால் தயாமீதாக்ஷம் 25% WG 100 கிராம் / எக்டர் அல்லது டைமீத்யோட் 1.5 மி.லி / லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். தற்பொழுது நிலவிவரும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் இலைச்சுருட்டுப்புழு மற்றும் தண்டுத்துளைப்பான் தாக்கம் காணப்படுவதால் அதை கட்டுப்படுத்த கார்போசல்பான் 400 மி.லி/ஏக்கர் அல்லது கார்டாப் ஹைட்ரோகுளோரைடு 600 கி/ஏக்கர் என்ற அளவில் காலை அல்லது மாலை நேரத்தில் தெளிக்கவும்.
- அறுவடைக்கு தயாராக உள்ள நெற்கதிர்களை அறுவடை செய்து பாதுகாப்பான இடங்களில் சேமித்து வைக்கவும்.
- நெல் நாற்று வயலில் மண் மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்தவும், தரமான நாற்றுகள் வளர்வதற்கும் அசோஸ்பைரில்லம் 2.5 கிலோவை 25 கிலோ மணல் / மண்ணுடன் கலந்து இட வேண்டும்.

- கரும்பு பயிரில் மாவுப்பூச்சி மற்றும் பொக்கா போங்க் தாக்கம் காணப்படுகிறது. இதனால் பயிர்களின் வளர்ச்சி குன்றி மற்றும் குருத்து காய்ந்து காணப்படும். இதனை கட்டுப்படுத்த இமிடாக்ளோப்ரிட் 17.8 SL 0.6 மிலி/லி அல்லது கார்பென்டாசிம் 1.0 கி/லி என்ற அளவில் தெளிக்கலாம். கரும்பிற்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் மற்றும் வளர்ச்சி ஊக்கிகள் கலந்த TNAU கரும்பு பூஸ்டரை கரும்பு நட்ட 45,60 மற்றும் 75 வது நாட்களில் ஒரு ஏக்கருக்கு 1 கிலோ 1.5 கிலோ மற்றும் 2 கிலோ வீதம் முறையே 200 லிட்டர் தண்ணீரில் தேவையான ஒட்டும் திரவம் கலந்து தெளிக்க வேண்டும்.
- பசை தடவிய மஞ்சள் நிறப்பாலித்தீன் தாள்களை மரத்தை சுற்றிகட்டி முதிர்ந்த ஈக்களை கவர்ந்து அழிக்கலாம். வெள்ளை ஈக்கள் அதிகளவு பரவும் போது என்கார்ஸியா ஒட்டுண்ணிகள், காக்ஸினெல்லிட் ஒட்டுண்ணிகள் / பொறிவண்டுகள் மற்றும் கிரைசோபெர்லா இரைவிழுங்கிகள் ஆகிய நன்மை செய்யும் பூச்சிகள் தோப்புகளில் இயற்கையாகவே உருவாக ஆரம்பிக்கும். என்கார்ஸியா ஒட்டுண்ணிகள் அதிக அளவு உருவாகி வெள்ளை ஈக்களின் சேதத்தை 40 முதல் 70% அளவுக்கு குறைக்கின்றது. அதிக பாதிப்பின் போது ஒரு லிட்டர் நீருக்கு வேப்பெண்ணெய் 20 மிலி அல்லது அசாடிராக்டின் 1.0% EC 2.0 மிலி/லிட்டர் தண்ணீரில் மருந்தை ஒரு லிட்டருக்கு 1.0 மி/லி ஒட்டும் திரவத்துடன் கலந்து தென்னை ஓலையின் அடிப்புறம் தெளிக்கவும்.
- வாழையில் வாடல் நோயை கட்டுப்படுத்த பேசில்லஸ் சப்டிலிஸ் மற்றும் ட்ரைக்கோடெர்மா விரிடி 2.5 கிலோ / எக்டர் இட வேண்டும் அல்லது பேசில்லஸ் சப்டிலிஸ் 5 மி.லி / லிட்டர் ஊற்ற வேண்டும். வாழையில் நுண்ணூட்ட சத்துக்களின் குறைபாட்டை நிவர்த்தி செய்ய மற்றும் பழத்தின் தரத்தை உயர்த்த, வாழை நட்ட 3,5 மற்றும் 7 மாதங்களில் நுண்ணூட்ட கரைசலை இலைமீது தெளிக்கவும்.

**கால்நடை ஆலோசனைகள்**

- செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடுகளுக்கு கால்நடை மருந்துவரின் பரிந்துரைப்படி குடற்புழு நீக்க மருந்தினை கொடுக்க வேண்டும்.
- அதிக பால் கொடுக்கும் கலப்பின கறவை மாடுகளில் மூன்று வேளை தீவனம் கொடுப்பதற்கு பதிலாக நான்கு வேளையாக பிரித்து கொடுக்கும் போது அதிக அளவு பால் உற்பத்தி கிடைப்பதோடு அல்லாமல் வெப்ப அயர்ச்சிக்கு உள்ளாகாமலும் இருக்கும்.
- வெப்ப அயர்ச்சியால் எருமைகளில் வெயில்கால மலட்டுத்தன்மை ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே வெப்பத்தை குறைக்க கொட்டகையில் நல்ல காற்றோட்ட வசதி செய்து தர வேண்டும்.
- வெண்பன்றிகளில் வெயில் காலங்களில் கொழுப்புச்சத்து அதிகம் உள்ள தீவனம் அதாவது பன்றிகளுக்கு இடும் உணவு கழிவுகளால் சில சமயங்களில் ஜீரண கோளாறு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே மாலை அல்லது இரவு நேரங்களில் கொழுப்புச்சத்து அதிகமுள்ள தீவனங்களை கொடுப்பது நல்லது.

- ஆஸ்பெஸ்டாஸ் அல்லது மெட்டல் கூரையுள்ள முயல் கொட்டகைகளில் கோடைகாலங்களில் கூரையின் மேல் தென்னங்கீற்றை அடுக்கி வைத்து அதன் மேல் தண்ணீர் பாய்ச்சும் போது கொட்டகையின் உட்புற வெப்பநிலை குறையும்.
- கோடை காலத்தில் கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கு குளிர்ந்த, ஆரோக்கியமான குடிநீரை வழங்குவது அவசியம்.

**7.அதிக மழை பெறும் மண்டலம்**

எதிர் வரும் 21.05.25 மற்றும் 25.05.25 ஆகிய தினங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்ப நிலை 34 - 35$^{0}$ செ ஆகவும், குறைந்த பட்ச வெப்ப நிலை 24 - 25 $^{0}$செ ஆகவும், வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். காலை நேர அதிகபட்ச வெப்பநிலை 60 - 70 % பதிவாக வாய்ப்புள்ளது. மதியம் நேர அதிகபட்ச வெப்பநிலை 40 - 60 % பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு 16 – 18 கி.மீ வேகத்தில் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரைகள்**

- நெல்லில் நாற்றங்காலில் தண்ணீர் தேங்காமல் இருக்க வேண்டும்.
- தென்னையில் தேங்காய் தொண்டுகளை குழிந்த பகுதி மேல்நோக்கிய வண்ணம் வட்டப்பாத்திகளிலோ அல்லது இரு தென்னை வரிசைகளுக்கு இடைவெளியிலோ புதைத்து மழை நீரை சேமிக்கலாம்.
- பழவகை மரங்கள் மற்றும் மரவாசனை பயிர்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளதால் வட்டப் பாத்திகள் அமைத்து மழை நீரை சேமிக்கவும்.
- வாழையில் காற்றின் வேகம் அதிகமாக இருப்பதால் வாழை மரங்களுக்கு கம்புகளால் முட்டு கொடுக்க வேண்டும். குலை தள்ளிய வாழையில் நுனி அழுகல் நோயைக் கட்டுப்படுத்த மேங்கோசெப் 2 கிராம் / லிட்டர் வீதம் கலந்து தெளிக்கவும்.
- மிளகில் தரையில் படரும் ஓடு கொடிகளை நோயிலிருந்து பாதுகாக்க கொடிகளை சார்பு மரங்களை சுற்றி விடவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.வே.ப.க. கோவை**